Date.05.02.2026.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்.

OS.19/2024

பி.வா.சா. 1

பெயர். திருமதி. பல்கீஸ்பேகம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>

தலாக் என்பது கணவன் மனைவியை விவாகரத்து செய்வதற்காக முகமதிய சட்டத்தில் பயன்படுத்தும் ஒருமுறை என்றால் சரிதான். அதேபோல் குலா என்பது முகமதிய மதத்தைச் சேர்ந்த மனைவி கணவனை விவாகரத்து செய்ய பயன்படுத்துவது என்றால் சரிதான். அதுபோன்று சுமையா பானுவிற்கும், நசீர் அஹமதுவிற்கும் குலா எதுவும் நடைபெறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கிற்கு முன்பு எனக்கு பாகம் பிரித்து தர வேண்டும் என்று கேட்டு வாதி சுமையா பானு எனக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். எங்களது மத சட்டத்தின்படி கணவருடைய சொத்தில் எத்தனை மனைவிகள் இருந்தாலும், அவர்கள் அனைவருக்குமே சேர்த்து 1/8 பாகம்தான் கிடைக்கும் என்றால், சரிதான். அதேபோல் பெண் குழந்தைகளைக் காட்டிலும் ஆண் குழந்தைகளுக்கு இரண்டு மடங்கு அதிகமாக பாகம் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். அந்த சட்டத்தின் படி தான் வாதி நசீர் அகமதுவின் சொத்தில் பங்கு கேட்கிறார் என்றால், எங்களை மிரட்டி தான் எழுதி வாங்கினார்கள். அவர் சட்டப்படி பாகம் கேட்கிறார் என்றால் சரிதான். நசீர் அகமதுவிற்கு தற்போது வழக்கில் சொல்லப்பட்டுள்ள வீட்டைத் தவிர வேறு வீடு எதுவும் இல்லை. இந்த வீட்டின் பத்திரங்களை நான்தான் வைத்துள்ளேன். அந்த பத்திரங்களை என்னிடம்

கேட்கும்போது நான் கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டேன் என்றால், சரிதான். எங்கள் பத்திரத்தை நான் அடுத்தவருக்கு ஏன் கொடுக்க வேண்டும்?. நசீர் அகமது இறக்கும் வரையில் சுமையா பானு அவருடன் தான் இருந்தார் என்றால், எங்களது வீட்டில் இல்லை. அவர் குடும்பம் செய்யவில்லை. நசீர் அகமதுவும், சுமையா பானு வண்டிமேட்டிலேயே வேறொரு வீட்டில் குடியிருந்தார்கள் என்றால் சரியல்ல. என் கணவர் என்னுடன் தான் இருந்தார். என் கணவர் சுமையா பானுவுடன் வண்டிமேட்டில் வேறொரு வீட்டில் குடியிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. என் கணவர் உயிருடன் இருந்தபோதுதான், சுமையா பானுவிற்கு 3 வது குழந்தை மக்தும் என்பவர் பிறந்தார் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. நசீர் அகமதுவிற்கு வாதிகளும் வாரிசுதாரர்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு இந்த வழக்கில் கேட்டுள்ளபடி பாகம் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அவர் மனைவியே இல்லை எப்படி பாகம் கொடுக்க முடியும்?. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.